1973 நவம்பர் 21]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : *தமிழ்நாட்டில் சுமார் 7½ லட்சம் மக்கள் தொழு நோயால் பாதிக்கப்பட்ட மக்களாக இருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரம் இருக்கிறது. 7½ லட்சம் பேரையும் கொண்டு போய்ச் சிகிச்சை அளிப்பதற்குத் தேவைப்படும் மருத்துவ மனை வசதி தமிழ்நாட்டில் இல்லை. 7½ லட்சம் பேரில் 4 லட்சம் நோயாளிகளுக்கு அவர்களுடைய இல்லத்திலேயே சென்று பாரா மெடிக்கல் ஒர்க்கர்ஸ் மூலமாக வாரத்திற்கு ஒரு முறை, இரண்டு முறை சிகிச்சை அளிக்கும் வகையில் கட்டுகள் போடப்படுகின்றன, மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. மிச்சம் உள்ளவர்களுக்கும் சிகிச்சை அளிக்கும் வகையில் வருகிற ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பாரா மெடிகல் ஒர்க்கர்ஸ் மூலமாகச் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்களில் குடியேற்றவும் ஏறத்தாழ ஐயாயிரம், ஆறாயிரம் பேருக்குத்தான் இடம் இருக்கிறது. பொதுமக்கள் கூடுகிற இடத்தில் மற்றவர்களுக்குத் தொல்லையாக பிச்சை எடுத்துக்கொண்டு இருப்பவர்களை அந்த இல்லங்களில் கொண்டு சேர்க்கும் வகையில் அந்த லட்சியத்தோடு அந்த இல்லங்கள் பயன்படுத்தப்படும்.*

Allowances for sanitary workers.

* 259 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether the allowance of the sanitary workers serving under the Local Bodies have been enhanced; and

(*b*) if so, the details thereof?

THE HON. THIRU K. ANBAZHAGAN : (*a*) Yes.

(*b*) The House Rent Allowance and City Compensatory Allowance of the Sanitary Workers have been enhanced to the same rate at which it is paid to the other regular local body employees. Their Pay and Dearness Allowance now paid will be added and amount of Rs. 35 being the minimum Dearness Allowance now allowed to the regular employees will be deducted for calculating the City Compensattry Allowance and House Rent Allowance as percentage of emoluments.

திரு. கே. டி. கே. தங்கமணி : *சமீபத்தில் சானிடரி ஒர்க்கர்ஸ் அடிப்படைச் சம்பளம் 100 ரூபாயாகவும், பஞ்சப்படி 35 ரூபாயாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, போனஸ் வேண்டுமென்*

பதற்காக ஒரு குறிப்பிட்ட ரூபாய் பிடித்து வந்தார்கள். இப்போது அடிப்படைச் சம்பளம் அதிகமாக இருப்பதால் இந்த விகிதாசாரத்தில் பிடிக்க வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பிக்க ஆலோசனை உண்டா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நான் குறிப்பிட்ட விடையே கூட சற்று முற்பட்ட நிலையை விளக்கும் விடைதான். அண்மையில் ஏற்பட்ட புதிய நிலைமையைக் கூற வாய்ப்பு இல்லை. வாய்ப்பு இல்லாததற்குக் காரணம் அண்மையில் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களில் பணிபுரிகின்றவர்களுக்கு புதிய சம்பள விகிதம் வழங்க வேண்டுமென்று ஆலோசனை செய்து முடிவு செய்திருக்கின்றார். அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

கோவைக்கு குடிநீர் வழங்குதல்

*** 260 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மக்களின் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கும் பொருட்டு என்னென்ன திட்டங்கள் தற்போது அரசு பரிசிலனையில் உள்ளன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சிங்காநல்லூர், கோயம்புத்தூர், ஆகிய ஊர்களுக்கும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் நீர் வழங்கும் விரிவான நீர் வழங்கல் திட்டம், சிறுவாணி மேம்பாட்டுத் திட்டம், ஆனையாறு திட்டம் முதலிய மூன்று திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருந்தன.

1973-ம் ஆண்டு மே மாதம் ஆனையாறு திட்டத்திற்கு அரசினரால் ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1973-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கேரள அரசுடன் சிறுவாணித் திட்டம் சம்பந்தமாக ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது. சிறுவாணித் திட்டத்திற்காக கேரள அரசினருக்கு முதனிலைப் பணிகளுக்காக ரூ. 10 லட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. கேரள மாநிலப் பகுதியிலிருந்து அணைப் பகுதி வரை சாலைகள் போட ரூ. 15 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மொத்தமாக சற்றேறக்குறைய 10 கோடி ரூபாய் அளவில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டிருக்கிறது